وُجُوۡهٌ يَّوۡمَئِذٍ نَّاعِمَةٌ ۙ﴿۸﴾ لِّسَعۡيِهَا رَاضِيَةٌ ۙ﴿۹﴾ فِىۡ جَنَّةٍ
عَالِيَةٍ ۙ﴿۱۰﴾ لَّا تَسۡمَعُ فِيۡهَا لَاغِيَةً ؕ﴿۱۱﴾ فِيۡهَا عَيۡنٌ جَارِيَةٌ ۘ﴿۱۲﴾ فِيۡهَا وقف لازم
سُرُرٌ مَّرۡفُوۡعَةٌ ۙ﴿۱۳﴾ وَّاَكۡوَابٌ مَّوۡضُوۡعَةٌ ۙ﴿۱۴﴾ وَّنَمَارِقُ
مَصۡفُوۡفَةٌ ۙ﴿۱۵﴾ وَّزَرَابِىُّ مَبۡثُوۡثَةٌ ؕ﴿۱۶﴾ اَفَلَا يَنۡظُرُوۡنَ اِلَى الۡاِبِلِ
كَيۡفَ خُلِقَتۡ ۟﴿۱۷﴾ وَاِلَى السَّمَآءِ كَيۡفَ رُفِعَتۡ ۟﴿۱۸﴾ وَاِلَى الۡجِبَالِ
كَيۡفَ نُصِبَتۡ ۟﴿۱۹﴾ وَاِلَى الۡاَرۡضِ كَيۡفَ سُطِحَتۡ ﴿۲۰﴾ فَذَكِّرۡ ۟
اِنَّمَاۤ اَنۡتَ مُذَكِّرٌ ؕ﴿۲۱﴾ لَسۡتَ عَلَيۡهِمۡ بِمُصَيۡطِرٍ ۙ﴿۲۲﴾ اِلَّا مَنۡ
تَوَلّٰى وَكَفَرَ ۙ﴿۲۳﴾ فَيُعَذِّبُهُ اللّٰهُ الۡعَذَابَ الۡاَكۡبَرَ ؕ﴿۲۴﴾ اِنَّ اِلَيۡنَاۤ
اِيَابَهُمۡ ۙ﴿۲۵﴾ ثُمَّ اِنَّ عَلَيۡنَا حِسَابَهُمۡ ﴿۲۶﴾ ع النصف

## سُوۡرَةُ الۡفَجۡرِ مَكِّيَّةٌ وَّهِىَ ثَلٰثُوۡنَ اٰيَةً

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ○

وَالۡفَجۡرِ ۙ﴿۱﴾ وَلَيَالٍ عَشۡرٍ ۙ﴿۲﴾ وَّالشَّفۡعِ وَالۡوَتۡرِ ۙ﴿۳﴾ وَالَّيۡلِ اِذَا
يَسۡرِ ۚ﴿۴﴾ هَلۡ فِىۡ ذٰلِكَ قَسَمٌ لِّذِىۡ حِجۡرٍ ؕ﴿۵﴾ اَلَمۡ تَرَ كَيۡفَ فَعَلَ
رَبُّكَ بِعَادٍ ۙ﴿۶﴾ اِرَمَ ذَاتِ الۡعِمَادِ ۙ﴿۷﴾ الَّتِىۡ لَمۡ يُخۡلَقۡ مِثۡلُهَا
فِى الۡبِلَادِ ۙ﴿۸﴾ وَثَمُوۡدَ الَّذِيۡنَ جَابُوا الصَّخۡرَ بِالۡوَادِ ۙ﴿۹﴾

8. (எனினும்) அந்நாளில் (வேறு) சில முகங்கள் மிக்க மலர்ச்சியுடையனவாக இருக்கும்.
9. (இம்மையில்) தாங்கள் செய்த முயற்சி (நற்பயனைத் தந்தது) பற்றி திருப்தியுடையனவாக இருக்கும்.
10. மேலான சுவனபதியில் (அவை) இருக்கும்_
11. அதில் யாதொரு வீண் வார்த்தையையும் (அவை) செவியுறாது_
12. அதில் (இவர்கள் பருகுவதற்கு) ஓடிக்கொண்டிருக்கும் ஒரு சுனையுண்டு.
13. அதில் உயர்ந்த ஆசனங்களுண்டு_
14. (அதன் பானங்களையருந்த) வைக்கப்பட்ட குவளைகளும் (உண்டு)_
15. வரிசையாகவைக்கப்பட்ட தலையணைகளும்_
16. விரிக்கப்பட்ட உயர்ந்த கம்பளங்களும் (உண்டு);
17. ஒட்டகத்தை _ அது எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறது? என்பதை, அவர்கள் (கவனித்துப்) பார்க்கமாட்டார்களா?
18. மேலும் வானத்தின்பால் _ அது எவ்வாறு உயர்த்தப் பட்டிருக்கிறது? (என்பதையும்)_
19 (அசையாது ஸ்திரப்படுத்தப்பட்ட) மலைகள் பால் _ அவை எவ்வாறு நடப்பட்டுள்ளன? (என்பதையும்)_
20. இன்னும், (அவர்கள் வசிக்கும்) பூமியின்பால் _ அது எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது? (என்பதையும் அவர்கள் கவனிக்கமாட்டார்களா?)
21. ஆகவே, நபியே! நல்லுபதேசம் செய்வீராக! நிச்சயமாக நீர் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்பவர்தாம்.
22. (அவ்வாறே நடக்கும்படி) அவர்கள் மீது நீர் பொறுப்புச்சாட்டப் பட்டவரல்லர்.
23. ஆயினும், எவர் புறக்கணித்து நிராகரிக்கின்றாரோ_
24. அவரை, அல்லாஹ் மிகப்பெரும் வேதனையாக வேதனை செய்வான்.
25. நிச்சயமாக அவர்களின் மீட்சி நம்பக்கமேயாகும்.
26. பின்னர், நிச்சயமாக அவர்களைக் கேள்வி கணக்கு கேட்பது நம்மீதேயாகும்.

---

அத்தியாயம் : 89

## அல்ஃபஜ்ர் _ விடியற்காலை

வசனங்கள் : 30 மக்கீ ருகூஃ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. விடியற்காலையின் மீது சத்தியமாக!
2. பத்து இரவுகளின் மீதும் சத்தியமாக!
3. இரட்டையின் மீதும், ஒற்றையின் மீதும் சத்தியமாக!
4. இரவின் மீதும் _ அது சென்றுவிடும்போது _ சத்தியமாக!
5. இதில் அறிவுடையோருக்கு (உறுதியளிக்கக்கூடிய) சத்தியம் இருக்கின்றதல்லவா?
6. உமதிரட்சகன் ஆ(து கூட்டத்)தை எவ்வாறு செய்தான் என்பதை நீர் காணவில்லையா?
7. பெரும் பலசாலிகளான (தூண்களையுடைய) இரமை (அவரின் பிள்ளைகளை)_
8. அக்கூட்டத்தினர் எத்தகையோரென்றால்_ (உலகத்திலுள்ள) நகரங்களில் அக்கூட்டத்தினரைப் போன்று (பலசாலிகள் எவரும்) படைக்கப்படவில்லை.
9. இன்னும், பள்ளத்தாக்கில் பாறையைக்குடைந்(து அதில் வசித்து வந்)தவர்களான ஸமூ(து கூட்டத்)தையும் _

وَفِرْعَوْنَ ذِی الْاَوْتَادِ ۪ۙ﴿۱۰﴾ الَّذِیْنَ طَغَوْا فِی الْبِلَادِ ۪ۙ﴿۱۱﴾
فَاَکْثَرُوْا فِیْهَا الْفَسَادَ ۪ۙ﴿۱۲﴾ فَصَبَّ عَلَیْهِمْ رَبُّکَ سَوْطَ
عَذَابٍ ۚ﴿۱۳﴾ اِنَّ رَبَّکَ لَبِالْمِرْصَادِ ؕ﴿۱۴﴾ فَاَمَّا الْاِنْسَانُ اِذَا مَا
ابْتَلٰىهُ رَبُّهٗ فَاَکْرَمَهٗ وَنَعَّمَهٗ ۬ۙ فَیَقُوْلُ رَبِّیْۤ اَکْرَمَنِ ؕ﴿۱۵﴾
وَاَمَّاۤ اِذَا مَا ابْتَلٰىهُ فَقَدَرَ عَلَیْهِ رِزْقَهٗ ۬ۙ فَیَقُوْلُ رَبِّیْۤ
اَهَانَنِ ۚ﴿۱۶﴾ کَلَّا بَلْ لَّا تُکْرِمُوْنَ الْیَتِیْمَ ۙ﴿۱۷﴾ وَلَا تَحٰٓضُّوْنَ
عَلٰی طَعَامِ الْمِسْکِیْنِ ۙ﴿۱۸﴾ وَتَاْکُلُوْنَ التُّرَاثَ اَکْلًا لَّمًّا ۙ﴿۱۹﴾
وَّتُحِبُّوْنَ الْمَالَ حُبًّا جَمًّا ؕ﴿۲۰﴾ کَلَّاۤ اِذَا دُکَّتِ الْاَرْضُ دَکًّا
دَکًّا ۙ﴿۲۱﴾ وَّجَآءَ رَبُّکَ وَالْمَلَکُ صَفًّا صَفًّا ۚ﴿۲۲﴾ وَجِایْٓءَ
یَوْمَئِذٍۭ بِجَهَنَّمَ ۬ۙ یَوْمَئِذٍ یَّتَذَکَّرُ الْاِنْسَانُ وَاَنّٰی لَهُ
الذِّکْرٰی ؕ﴿۲۳﴾ یَقُوْلُ یٰلَیْتَنِیْ قَدَّمْتُ لِحَیَاتِیْ ۚ﴿۲۴﴾ فَیَوْمَئِذٍ
لَّا یُعَذِّبُ عَذَابَهٗۤ اَحَدٌ ۙ﴿۲۵﴾ وَّلَا یُوْثِقُ وَثَاقَهٗۤ
اَحَدٌ ؕ﴿۲۶﴾ یٰۤاَیَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ ۤۙ﴿۲۷﴾ ارْجِعِیْۤ اِلٰی
رَبِّکِ رَاضِیَةً مَّرْضِیَّةً ۚ﴿۲۸﴾ فَادْخُلِیْ فِیْ عِبٰدِیْ ۙ﴿۲۹﴾
وَادْخُلِیْ جَنَّتِیْ ؑ﴿۳۰﴾ ع ۱ ۱۴

10. இன்னும், முளைகளுடைய_(பெரும் படைகளையுடைய) ஃபிர் அவ்னையும் (உமதிரட்சகன் எவ்வாறு செய்தான் என்பதை நீர் காணவில்லையா?)

11. அவர்கள் எத்தகையோரென்றால், நகரங்களில் அவர்கள் வரம்பு மீறி நடந்தார்கள்.

12. பின்னர், அவைகளில் அவர்கள் குழப்பத்தை அதிகப்படுத்தினார்கள்.

13. எனவே, உமதிரட்சகன் அவர்கள் மீது வேதனையின் சாட்டையைப் போட்டான்.

14. நிச்சயமாக, உமதிரட்சகன் (அடியார்களின் ஒவ்வொருசெயலையும்) கண்காணித்துக் கொண்டிருக்கின்றான்.

15. ஆகவே, மனிதன்: அவனுடைய இரட்சகன் அவனை சோதித்து, பின்னர் அவனைக் கண்ணியப்படுத்தி, அவனுக்கு அருட்கொடைகளையும் அளித்தால், "என்னை என்னுடைய இரட்சகன் கண்ணியப்படுத்தினான்" என்று கூறுகிறான்.

16. இன்னும், (அல்லாஹ்) அவனைச் சோதித்து, அவனுடைய வாழ் வாதாரங்களை நெருக்கடியாக்கிவிட்டால், அப்போது "எனதிரட்சகன் என்னை இழிவுபடுத்திவிட்டான்" என்று அவன் (குறை) கூறுகிறான்.

17. (காரியம்) அவ்வாறன்று! எனினும், நீங்கள் அநாதையை கண்ணியப் படுத்துவதில்லை.

18. ஏழைக்கு(நீங்கள் உணவளிக்காததுடன், மற்றெவரையும்) உணவளிக்கும் படித் தூண்டுவதுமில்லை.

19. (பிறருடைய) அனந்தரச் சொத்துக்களையும் சேர்த்து உண்டு வருகிறீர்கள்.

20. மேலும், நீங்கள் மிக்க அளவு கடந்து செல்வத்தை நேசிக்கிறீர்கள்.

21. (உங்கள் செயல்கள் இவ்வாறிருப்பது சிறந்தது) அல்ல! பூமி தூள் தூளாகத் தகர்க்கப்பட்டுவிடும்போது_

22. உமது இரட்சகன் , மேலும் , மலக்குகள் அணி அணியாக வரும்போது_

23. அந்நாளில் (பாவிகளுக்காக) நரகமும் கொண்டுவரப்பட்டுவிட்டால், அந்நாளில் மனிதன் (உலகில் அவன் அல்லாஹ்விற்கு மாற்றமாக நடந்ததை) நினைவு கூர்வான்; இன்னும், (அச்சமயம்) அவனுக்கு நினைவு கூர்வது எவ்வாறு (பயனுள்ளதாக) ஆகும்?

24. "என்னுடைய (இந்த) வாழ்க்கைக்காக (நன்மையைச் செய்து) நான் முற்படுத்தி (அனுப்பி) இருக்க வேண்டுமே!" என்று (அப்போது மனிதன்) கூறுவான்.

25. எனவே, அந்நாளில் (அல்லாஹ்வாகிய) அவன் செய்யும் வேதனையைப் போல், மற்றெவனும் வேதனை செய்யமாட்டான்.

26. இன்னும், அவன் கட்டுவது போல் வேறுஎவனும் கட்டமாட்டான்.

27. (அல்லாஹ்வின் கட்டளைகளை உண்மைப்படுத்துவதுகொண்டு) அமைதிபெற்ற ஆத்மாவே!

28. நீ உன் இரட்சகன் பக்கம் (அவனைத்) திருப்தியடைந்தநிலையிலும், (அவனிடம்) பொருந்திக்கொள்ளப்பட்டநிலையிலும் மீள்வாயாக!

29. நீ எனது அடியார்(களான நல்லோர்களின் கூட்டங்)களில் பிரவேசிப்பாயாக!

30. மேலும், என்னுடைய சுவனத்தில் நீ நுழைந்துவிடுவாயாக! (என்றும் அல்லாஹ் கூறுவான்.)